


02.08.2024

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் ஆளுநர்கள் மாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

2. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் எயிம்ஸ் மருத்துவமனைகளின் தரத்தை மேம்படுத்துவதில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா மக்களவையில் தெரிவித்துள்ளார்.

3. உண்மைக்கு புறம்பான செய்திகள் கட்டுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் மாநிலங்களவையில் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் கற்றல் முறையில் அரசு மாற்றங்களை மேற்கொண்டதன் காரணமாக வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலும் அரசு பள்ளி மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. பாரீஸ் ஒலிம்பிக் 25 மீட்டர் பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டியில் மனு பாக்கர் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

குடியரசுத்தலைவர்

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில் இரண்டு நாள் ஆளுநர்கள் மாநாடு புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று தொடங்கியது.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உட்பட அனைத்து மாநிலங்களின் ஆளுநர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

3 புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறை படுத்துதல்,

உயர்கல்வியில் சீர்திருத்தங்கள்,

பல்கலைகழகங்களின் அங்கீகாரம்,

மலைவாழ் கிராமங்களின் வளர்ச்சி,

முன்னேற விரும்பும் மாவட்டங்கள், வட்டாரங்களின் மேம்பாடு போன்றவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

எனது பாரதம், ஒரே பாரதம் உன்னத பாரதம், அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம், இயற்கை வேளாண்மை போன்ற திட்டங்களில் ஆளுநர்களின் பங்கு குறித்தும் இதில் ஆலோசிக்கப்படுகிறது.

மத்திய முகமைகள் இடையே ஆளுநர்களின் ஒருங்கிணைப்பை விரிவுபடுத்தி பொதுமக்களுடனான தொடர்பை மேம்படுத்துவது குறித்தும் இதில் ஆராயப்படுகிறது.

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 32ஆவது சர்வதேச வேளாண் பொருளாதார நிபுணர்கள் மாநாட்டை புதுதில்லியில் நாளை துவக்கிவைத்து உரையாற்றுகிறார்.

“ நீடித்த வேளாண் உணவு முறையை நோக்கிய மாற்றங்கள்” என்ற கருப்பொருளுடன் இந்த மாநாடு இன்று தொடங்கியது.

காலநிலை மாற்றம், இயற்கை வளங்கள் மேம்பாடு, உற்பத்தி விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு சவால்களின் மத்தியில் நீடித்த விவசாயத்திற்கான வழிமுறைகளை ஆராய்வது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

பல்கலைகழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தி தேசிய சர்வதேச நிலையிலான கொள்கைகளை உருவாக்குவது குறித்தும் இதில் ஆராயப்படுகிறது.

வரும் 7 ஆம் தேதிவரை நடைபெறும் இந்த மாநாட்டில் 75 நாடுகளை சேர்ந்த ஆயிரம் பிரதிநிதிகள் பங்கேற்கின்றன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஜே.பி நட்டா

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் எயிம்ஸ் மருத்துவமனைகளின் தரம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா மக்களவையில் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இம்மருத்துவமனைகளில் சிறந்த மருத்துவர்களை பணிநியமனம் செய்ய அரசு விரும்புவதால் இதற்கு கூடுதல் காலம் பிடிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் தரமான மருத்துவ முறைகளுடன் 17 எயிம்ஸ் மருத்துவமனைகளை திறக்க பிரதமர் முயற்சிகளை மேற்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள அனைத்து பகுதி மக்களும் தத்தம் பகுதிகளிலேயே சிறந்த மருத்துவ சிகிச்சைகளை பெறும் நோக்கில்தான் எயிம்ஸ் மருத்துவமனைகள் உருவாக்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

டெல்லி எயிம்ஸ்சில் வழங்கப்படும் சிகிச்சை தரம் அனைத்து எயிம்ஸ் மருத்துவமனைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

பிரதமரின் மக்கள் மருந்தகம் திட்டத்தில் மலிவு விலையில் மருந்துகள் விற்கப்படுவதால் 28 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை மக்கள் சேமிக்க முடிந்தாக தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

மாநிலங்களவை

பத்திரிக்கை தகவல் அமைப்பின் உண்மை கண்டறியும் பிரிவின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் 9 ஆயிரத்து தொள்ளாயிரத்து 22 தகவல்கள் போலியானவை என கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், கடந்த 2019ஆம் ஆண்டு இப்பிரிவு உருவாக்கப்பட்டதாகவும், இதற்கான மண்டல பிரிவுகளை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார்.

போலி செய்திகள், போலி தகவல்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் அவர் எடுத்துரைத்தார்.

மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ், மத்திய அரசை சார்ந்த செய்திகளின் உண்மை தன்மை குறித்தே, மத்திய அரசு தகவல்களை தெரிவிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களவை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் பேசுகையில் ஜனநாயகத்தின் 4ஆவது தூணாக திகழும் ஊடகங்கள் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாக திகழ்கிறது என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணாக்கரின் எண்ணிக்கை 37 சதவிகிதம் அதிகரித்துள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதன்மை கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பிற்காக பயிலச் செல்லும் அரசு பள்ளி மாணாக்கரை பாராட்டி மடிகணினிகளை இன்று சென்னையில் வழங்கி பேசிய அவர், கற்றல் முறையில் நவீன மாற்றங்கள் காரணமாக வெளிநாடுகளில் உயர்கல்வி பயிலும் அளவிற்கு மாணாக்கரின் கல்வி தரம் உயர்ந்திருப்பதாக கூறினார்.

இம்மாணாக்கரின் கல்வி செலவையும், அவர்களது முதல் பயண செலவிற்கான கட்டணத்தையும் அரசே ஏற்கும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஊக்கத்தொகை

தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் ூீளுஊள் முதல்நிலை தேர்விற்கு தயாராகும் மாணாக்கருக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை மதிப்பீட்டு தேர்விற்கான விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

வரும் 17ஆம் தேதிவரை இதற்கு விண்ணப்பிக்கலாம்.

இந்த தேர்வில் தேர்ச்சி பெறும் ஆயிரம் மாணாக்கர் ூீளுஊ தேர்விற்கு தயாராகும் வகையில் மாதந்தோறும் ஏழாயிரத்து 500 ரூபாய் ஊக்கத்தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பழனிவேல் தியாகராஜன்

தமிழ்நாட்டில் மாணாக்கருக்கு வேலை வாய்ப்பு அடிப்படையிலான தொழில் நுட்ப பயிற்சிகள் வழங்கப்படுவதாக மாநில தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

மதுரை திரு.வி.க மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மாணாக்கருக்கு விலையில்லா மிதிவண்டிகள் மற்றும் சீருடைகளை இன்று வழங்கி பேசிய அவர், பள்ளி மாணாக்கருக்காக எண்ணற்ற சிறப்பு திட்டங்களை அரசு செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

சேகர்பாபு

திருச்சி சமயபுரம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள பல்வேறு திருக்கோவில்களில் தங்க தேர் பழுதுபார்க்கப்பட்டு இயக்கப்படுவதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னை காளிகாம்பாள் திருக்கோவிலில் 2 கோடி ரூபாய் செலவில் வெள்ளி தேர் செய்யும் பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் தேரோட்டங்கள் விமரிசையாக நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைதொகை, முதியோர் உதவிதொகை திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் பந்தல்குடியில்இன்று பொதுமக்களிடமிருந்து மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் மக்களை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ராஜேந்திர சோழன்

அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த சோழ மாமன்னன் ராஜேந்திர சோழன் பிறந்த ஆடி திருவாதிரை சுற்றுலா துறை சார்பில் அரசு விழாவாக இன்று கொண்டாடப்படுகிறது.

சோழர்களின் கட்டிடகலை அவர்களது ஆட்சிமுறை பற்றி வருங்கால சந்ததியினர் தெரிந்துகொள்ளும் வகையில் இவ்விழா கொண்டாடப்படுவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எ.எ சிவசங்கர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாட்டம், ஒயிலாட்டம் உட்பட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இவ்விழாவை ஒட்டி அரியலூர் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பத்திரப்பதிவு

ஆடிப்பெருக்கை முன்னிட்டு தமிழ்நாட்டில் நாளை பத்திரப்பதிவு அலுவலகங்கள் திறந்திருக்கும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

அன்றையதினம் மேற்கொள்ளப்படும் பத்திரபதிவுகளுக்கு ஆவண பதிவுக்கான கட்டணம் சேர்த்து வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

திருச்சி கொள்ளிடம்

திருச்சி கொள்ளிடம் ஆற்றில் அதிக நீர்வரத்து காரணமாக சாய்வடைந்த மின்கோபுரங்களை ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று ஆய்வு செய்தார்.

பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்று வழியில் மின்விநியோகம் சீராக வழங்கப்படுவதாக கூறினார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் கல்வி உதவி தொகை பெற வசதியாக, மாணாக்கர் உடனடியாக வங்கி கணக்கை தொடங்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.லட்சுமிபதி கேட்டுக்கொண்டார்.

இதற்கான சிறப்பு முகாம்கள் இன்று கல்லூரிகளில் நடைபெறுவதாக அவர் கூறினார்.

நாகை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி மாணாக்கர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வட்டார வள பயிற்றுநர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

வல்வில் ஓரி விழா

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் சுற்றுலாத்துறை சார்பில் வல்வில் ஓரி விழா, சுற்றுலாவிழா, மலர்கண்காட்சி இன்று தொடங்கியது.

ஏராளமான சுற்றுலா பயணிகள் இதனை பார்வையிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று நண்பகல் ஒரு லட்சத்து 30 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து இன்று வினாடிக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

இதனிடையே தர்மபுரியில் ஆடி பெருக்கு விழா இன்றே தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

இந்நிலையில் காவிரி ஆற்றில் வெள்ள பெருக்கு காரணமாக கரூர் தவிட்டுப்பாளையம் பகுதி குடியிருப்புகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஒலிம்பிக்

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் வில்வித்தை கலப்பு அணி பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியது.

25 மீட்டர் பிஸ்டல் துப்பாக்கி சுடும் போட்டியில் மனு பாக்கர் இன்று களமிறங்குகிறார்.

பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் லக்ஷயா சென் - சீன தைபேயின் தியன்சென்னை இன்று மாலை எதிர்கொள்கிறார்.

ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று – ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி கொழும்புவில் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழு